
ஓலை 151 | ஓசை 274 | டிசம்பர் 2025

# அகர முதல இலக்கியப் பேரவை



‘மக்கள் கவிஞர்’ பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று

## பொருள்

விருந்தினர் வீட்டிற்கு வெளியே இருக்கத் தான் மட்டும் தனித்து உண்பது, சாவைத் தடுக்கும் மருந்தே என்றாலும், விரும்பத் தக்கது அன்று.


அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய

9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்

ஆசிரியர்கள்

அ.வில்சன்

குமர.தர்மசீலன்

வடிவமைப்பு

ச.சூர்யா, அ.வில்சன்

அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.


அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## மீகாம னில்லா மரக்கல மோடாது!

பாவகை : அடிமறி மண்டில ஆசிரியப்பா

வான மின்றி வான்முகி லில்லையே!
வான மின்றி வான்நில வில்லையே!
பரிதி யின்றி பகலு மில்லையே!
பரியு மின்றி பறந்தோ டலாமோ?
காடுக ளின்றி கார்முகி லில்லையே!
நாடு மின்றி நாம்வாழ்த லில்லையே!
மழையு மின்றி மலையரு வியிலையே!
மலையரு வின்றி மாயாறு மில்லையே!
உழைப்போ ரின்றி உலக மில்லையே!
உழவரு மின்றி உணவு மில்லையே!
உணவு மின்றி உயிர்களு மில்லையே!
மணமு மின்றி மல்லி இல்லையே!
குணமு மில்லார் கோடிக் கோடியே!
அறமும் இல்லார் அழிந்துதான் போவரே!
நிறமு மின்றி வானவில் இல்லையே!
நல்வினை யின்றி நாநிலம் அழியுமே!
பொல்லார் வாழ்வும் பொழுதில் சாயுமே!
மாலுமி இல்லா மரக்கலம் ஓடாது!
ஆளுவோர் இல்லா அரசாய் சாயுமே!
மானமு மில்லார் மாய்வர் வதைந்தே!
ஆன வரையில் அன்பறம் ஏற்போமே!







**இலக்கணக் குறிப்பு:**

அகவல் என்னும் ஆசிரியப்பா வகைகளில் அடிமறி மண்டில ஆசிரியப் பாவும் ஒன்று. இப்பாடல், நான்கு நான்கு ஈரசைச் சீர்களினை ஒவ்வோரடியிலும் பெற்று வரும். காய்ச்சீரும் விரவி வரலாம். ஒவ்வோரடியும் தொடங்கி அதே அடியில் முடியும். இதனால், அடிகளைக் கீழிருந்து மேலாக, மேலிருந்து கீழாக முன்னுக்குப் பின், பின்னுக்கு முன் மாற்றிப் போட்டு வாசித்தாலும் பொருள் மாறாமல் இருக்கும். ஒவ்வோரடியின் ஈற்றுச் சீரும் ஏகாரத்தில் முடியும்

ஒவ்வோரடியிலும் முதல் சீரிலும் மூன்றாம் சீரிலும் பொழிப்பு மோனைப் பெற்று வரும். சிந்தடியாக இருந்தாலும் முதல் சீரிலும் மூன்றாம் சீரிலும் பொழிப்பு மோனைப் பெற்று வருதல் சிறப்பு. எதுகையை இரண்டடி தோறும் ஒரெதுகை வரும்படி எழுதலாம். இல்லையேல் பொழிப்பெதுகைப் பெற்று தனித்தனி அடிகளாகவும் வரலாம். பொழிப்பெதுகைப் பெற்று வருதலே சிறப்பாகும்.

# நடைபாதை வீடு

பாவகை : கலிவெண்பா

நடைபாதை வீடும் நலிந்த நிலையில்
கடைநிலை வாழ்வோர் கனத்த இதயம்
அடையாளம் இன்றியே அல்லலில் மூழ்க
அடைமழை வந்திட அண்ட அலைதல்
உடைந்த மனதின் உருவும் குறைய
படைத்தவன் தன்னைப் பலமுடன் திட்ட
உடையும் நனைந்தே உதறல் எடுக்க
கடையும் இழந்தே கடனென வாழ
மடையும் திறந்திட மங்கும் நிலையில்
இரக்க முடையோரால் இன்னல் அகல
அரக்க மனதோர் அதையும் பிடுங்க
பசியில் வருந்திப் பதுங்கிச் சுருள
நசிந்தே கிடக்கையில் நாய்கள் குரைத்திட
அங்கமும் நொந்தே அமைதி இழக்கவேத்
தங்கும் இடத்தில் தவிப்பு.



கவிஞர் செ. கலைவாணி

ஜெனித்த
சிலநொடிகளில்
வாழத் திராணியற்று
தன்னாயுளை
முடித்துக் கொள்கிறது
நீர்க்குமிழி.

சிறுதாக்குதலையும்
எதிர்க்கொள்ள
விழையாத
கண்ணாடி குண்டு
நூறாய் நொறுங்குகிறது.



தன்பலத்தை
நிரூபிக்க வேண்டிய
கட்டாயத்தில்
மோதிய வேகத்திற்கு
கொஞ்சம் நசுங்குகிறது
இரும்பு குண்டு.

எதையும் தாங்கும் இதயம்
ஜீவனுள்ள மட்டும்
தொண்டைக்கும்
வயிற்றுக்குமாய் விடாது
அலைகிறது.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# கடந்து போதல்

வழிந்தோடும் நீரில்
விளையாடுகின்றன மீன்கள்.
இரை குறித்த இலக்கோடு
பறந்துவந்து கொத்திச் செல்கிறது
மீன்கொத்தி ஒன்று.
உயிர் வாழ்தலும், உணவு குறித்த
எண்ணங்களோடும்
வாகனத்தில் விரைந்து விரைகிறது
மற்றொரு உயிர்.



கவிஞர் ஸ்ரீவள்ளி, கோவை

# தன்னம்பிக்கையால் வெளுத்திடு

நாளைய உலகம் உனக்கு
நாளும் கவலைகள் எதற்கு?
வானும் மண்ணும் உனக்கு
வாழ்வதில் என்ன பிணக்கு ?
உணவுக்கு வாழ்வது வேட்கை
உணர்வுக்கு வாழ்வது வாழ்க்கை.
வாசலை திறந்து வை.
வருத்தம் அளிக்கும் வரிவிலக்கு.
வாசலை மூடி வைத்தால்
வாய்மூடி நிற்கும்
நம்பிக்கை விளக்கு.
கதிரவனை புஜமாக்கு .
கனவுகளை நிஜமாக்கு .
வாழ்ந்தால் நல் கதையாகு.
வீழ்ந்தால் நல்விதையாகு.
வெற்றிக் குவளையில்
சாதனை ரசமாகு.
வெறுப்பை விருப்பாய் மாற்று.
இருப்பை வரலாறாய் மாற்று.
உழைப்பை விலாசமாக்கு.
உயர்வை விசாலமாக்கு ..
அதர்மத்தை தர்மத்தால் வெளுத்திடு.
கோபத்தை பொறுமையால்
கொளுத்திடு.
தீமையின் அழுக்கை
நன்மையால் வெளுத்திடு.
கவலையின் சாயத்தை
தன்னம்பிக்கையால் வெளுத்திடு.



கவிஞர் முனைவர் முனியாண்டி, திருவில்லிபுத்தூர்

வெகுதொலைவில்
இருந்தாலும்
விழித்து இருக்கிறாயே!
வீரமாய் விரைந்து
வெளிச்சதை கொடுத்து
தனித்துவமாய் இயங்கும்
தனிமை அரசியே!



கவிஞர் மோனிஷா

பெருங் காற்று தீண்ட
பொங்கும் மா கடல்.
பெருகிப் பாயும் வெள்ளம்
பொலி விழந்த பூங்கா
பசி மறந்த புல்லினம்.
மழை நனைத்த சாலை
மனதை நொறுக்க.
அதிகாரம் இழைத்த பிழை
அல்லற் படும் மக்கள்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ்நாடு

# தேவைகளைக் கூட்டுகின்றான்

தேவைகளை நாள்தோறும் கூட்டுகிறன்றான்-மனிதன்
தேவையின்றிப் பலபொருட்கள் வாங்குகின்றான்;
நாவினிக்கும் பற்பலவும் உண்ணுகின்றான்-அவன்
நல்லுணவை ஏற்றிடவே மறுக்கின்றான்;
பூவுலகம் தனக்கென்று நினைக்கின்றான்-பிறர்
புவிவாழ்வை இயன்றமட்டும் தடுக்கின்றான்;
தாவுகின்ற மனத்துடனே வாழ்கின்றான்-நாளும்
தரைமீது துன்பங்கள் இழைக்கின்றான்!



வாய்ப்பேச்சில் வல்லவனாய் இருக்கின்றான்-தானும்
வந்தவரை பொய்யனாக வாழ்கின்றான்;
தாய்மொழியின் பெருமைகளை மறக்கின்றான்-வீணாய்த்
தலைவணங்கிப் பிறமொழியை ஏற்கின்றான்;
வாய்மையென்றால் என்னவென்று கேட்கின்றான்-நாளும்
வந்தவரை பொய்களையே பேசுகின்றான்;
பாய்மீதில் படுப்பதையே வெறுக்கின்றான்-தானும்
பலநோய்கள் அடைந்தவனும் வாடுகின்றான்!

பிறவுயிர்கள் கொன்றவனும் உண்கின்றான்-அதனைப்
பெரும்பிழையாய் உணராமல் வாழ்கின்றான்;
உறவுகளை அகந்தையாலே இழக்கின்றான்-மண்ணில்
உழுதொழிலைக் கேவலமாய்ப் பார்க்கின்றான்;
அறம்கூறும் நூல்படிக்க மறக்கின்றான் -வாழ்வில்
அநியாயம் பற்பலவும் செய்கின்றான்!
இறப்பென்றல் இல்லைபோல நினைக்கின்றான்-என்றும்
இழிவுபல புரிந்தவனும் மகிழ்கின்றான்!

கவிஞர் இராம. பரஞ்சோதி, பொழிச்சலூர், சென்னை

நீர்க்கரு சுமந்த வான்மகளுக்கு
தீச்சுடரால் வரவேற்பு!

மண்மகளின் குளிருக்கு
கதகதப்பூட்டும்
தீ(ப) ஒத்தடம்!

மண் பிசைந்து வனைந்த
அகலில் முளைத்து
எண்ணெய் குடித்து வளரும்
தீத்திரி(யுண்ட) நிலவு!

ஓரிடத்து இருந்து
ஒளிநடனம் புரியும்
ஒற்றைக் கால் மாது!

விண்ணிருந்து நீரம்புகள்
கீழேதான் வீழும்!
மண்ணிருந்து பரவுந்தழல்
மேல்நோக்கியே எழும்பும்!

இயற்கைக்கே வெளிச்சம்!
இத்துணை அழகும் இயல்பும்!

புறயிருள் போக்கிட
அகவொளி ஏற்றிடும்
கார்த்திகை தீபம்!



கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி



உன்மனம் மறைக்க
நினைக்கும் சேதியை.
உன்விழி எனக்கு
குறிப்புரைக்கிறதே அன்பே.

அவன்காதலி அழகுள்ளவள்
ஆயினும் அவளுள்.
அறியாமையெனும் மடமை
மிகுந்து உள்ளாளே.

மணியில் கோர்த்தநூல்
வெளியில் தெரியுமாப்போல்.
மலர்ச்சியில் காதலியிவளின்
உள்ளம் தெரிகிறதே.

மொட்டுக்குள் அடங்கிய
மணம்போல் இவளின்.
முறுவலில் கருத்தொன்று
மறைந்து மணக்கிறதே.

அவனோக்கி வளையசைத்து
ஒலியெழுப்பிய குறிப்பில்.
ரணம்போக்கும் மருந்தொன்று
பொலிவாய் உள்ளதாமே.

என்னவன் காட்டும்
பேரன்பது விரைவில்.
எனையவன் பிரியவிருப்பதை
குறிப்பால் சுட்டுகிறதே.

என்னவன் என்னை
பிரியத் துணிந்தானென்று.
எனக்குமுன் என்வளைகள்
அறிந்து கொண்டனவே.

என்னவன் எனைப்பிரிந்தது
நேற்றாய் இருந்தபோதும்.
என்னுடல் பசந்து
ஏழுநாட்கள் ஆகின்றனவே.

வளைகளையும் தோள்களோடு
அடியினையும் நோக்குதல்.
காதலியவள் தலைவனுடன்
செல்லவிரும்பும் குறிப்புகளே.

விழிகளில் குறிப்புரைத்து
காதல் நோயுணர்த்துதல்.
காதலனைப் பிரியாதிருக்க
ஆவல்கொண்ட பெண்சிறப்பே!


கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# யாவும் உன் விருப்பமே!

துன்பங்களின்போது துவண்டு விடுகிறேன்
இன்பங்களின் போது சிறக்கடிக்க நினைப்பதில்லை
யாவும் அறிந்திருக்கிறேன்
இருந்தும் துவண்டுவிடுகிறேன்!



வாழ்வில் அனுபவம் தந்த கற்றல்கள்
மீண்டும் ஒரு முறை
எனை புடமிடவா செய்கிறது?
வினாக்கள் எனை ஆராய்கிறது
ஒருமுறையல்ல ஓராயிரம் முறைகாணும்

ஏன் இப்படி? எதற்கு இப்படி?
அமைதி தேடி நிற்கிறது மனது
ஒவ்வொரு தேவவார்த்தையும்
எனக்குள் வினாக்களைத் தொடுக்கிறது
இருகரம் குவித்து நின்றேன்
விழியால் ஊற்றினேன் நீரை
எதற்கும் விடையில்லா வினாவாக
நம்பிக்கை என்னும்
பரம்பொருள் ஒன்றை மட்டும்
வாங்கிக் கொண்டே நிற்கிறேன்
" அமைதி " யைத் தேடி!

வாழ்வு எத்தனை போக்கையுடையது
வாழ்வை நேசிக்கும் யாவருக்கும் இதுதானா?
புரியவில்லை எனக்கு
உன்னை நெருங்கிய போதெல்லாம்
பாடங்களை அனுபவித்திட
இன்பமோ துன்பமோ எதுவானாலும்
கற்கச் செய்கிறாய்
எத்தனை நாட்களுக்கு இந்த விளையாட்டு?
வேண்டாம் என்று கூறத்தான் முடியுமா?
என் விருப்பம் அன்று
யாவும் உன் விருப்பமே

கவிஞர் திருமதி. ஜூவனீற்றா கிங்ஸ்லி, கல்முனை, இலங்கை

# அம்மாவுக்கு

தினமும் விழித்தவுடன்
தேடிடும் அன்பு முகம்
உணவு உண்ண தலை கோதிடும்
கரங்களுக்கு ஏங்கும் மனது

தவறு செய்யாமல்
தடுத்திடும் வெள்ளை உள்ளம்
செல்லக் கோபங்களில்
சிக்கிக்கொள்ளும் பாசம்



அன்பைத் தவிர ஏதும் தர
அறிந்திடா உள்ளம்
தலை சாய்த்து உறங்கிட
கால்களுக்காக ஏங்கிடும் உள்ளம்

குடும்பத்தாரின் நலனை ஏற்று
தன்னை கவனிக்கத் தவறிய
பாசக்காரி

அம்மாவைத் தவிர
வேறொருவர் இருப்பதாய்
நினைவில்லை எனக்கு!

அம்மாவிற்கு சமர்ப்பணம்!

கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# மௌனத்தின் பலம்

முள்ளெனவே தைத்திட்டு முடங்கியழ வைக்கும்
எள்ளெனவே பொரிந்த எதிரொருவர் தீச்சொற்கள்!
தவமுனி போலவே தன்னிலை நிதானமோ
எவரிடம் இருக்கும் இறுக்கத்தைத் தளர்த்துமே!

சள்ளென்று விழுவோர் சமாதானம் அடைவர்!
தள்ளென்றுச் சொல்லியவர் தணிந்தே செல்வர்!
ஔடதமாய் மாறியே ஒத்தடமாய் இருந்திடுமே!
மௌனத்தின் பலத்தை மறுத்தவர் இல்லையே!



கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி

# உயிர் தந்து உறவானதும் நீயோ?



என்னுள் வாழ்பவனே
எனக்கான மன்னவனே
உள்ளத்து உணர்வுகளில்
உறவாகி உயிரானவனே

ஆசை நாயகனே
ஆனந்தம் தந்தவனே
குறும்பானப் பார்வையில்
குதூகலம் ஆனேனே

இதழமும் பருகியே
இதயத்தை ஆள்பவனே
மெலிதான அரவணைப்பில்
மெல்லிடையும் சிலிர்க்குதே

மாயவனே மங்கையின்
உள்ளத்தில் நிறைந்தவனே
உயிர் தந்து  உறவானதும் நீயோ?

எண்ணங்களின் பரிமாற்றத்தில்
வண்ணங்களைக் கலந்தவனே
ஒருபோதும் நீங்கிடாது
ஒன்றான அன்பனே

ஐயிரண்டு விரல்கள்
ஐக்கியமாகட்டும் காதலிலே
விழியோரங்கள் வியப்பாகிட
விந்தைகள் புரிந்தவனே

கன்னத்தில் முத்தமிட
கனிவானது நெஞ்சம்
உதிர்ந்திடாத நினைவுகள்
உண்மையின் அன்பினாலே

உயிர் தந்து உறவானதும் நீயோ?

எத்தனை பிறவிகள் எடுத்தாலும்
தொடரும் பந்தமே
நேசிக்கிறேன் உன்னையே
யாசிக்கிறேன் இளையவனே

இல்லறத்தின் சொந்தமே
சொர்க்கத்தின் காவலனே
நல்லமறமாகட்டும் எந்நாளும்
உனது அரவணைப்பிலே

கவிஞர் ஜெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# கல்வியின் உன்னதம்




அன்று அன்னையின் கரம் பிடித்து "அ" என
எழுதுகையில் அணு அளவும்
நினைக்கவில்லை நான்.
இந்த கல்வி தான் என் வாழ்வில்
மாற்றத்தை ஏற்படுத்தும் என்று
மழலை மனம் மாறாத வேளையில்
நண்பர்களை காண வேண்டுமென்ற ஆவலில்
பள்ளி சென்ற நாட்கள் இன்றளவும்
நெஞ்சை விட்டு அகலாமல் இருக்க,
காலங்கள் என்னை கடத்திச்
சென்றன கல்லூரி பருவத்திற்கு,
பிடித்தும் பிடிக்காமலும்
பெற்றோரின் விருப்பத்திற்கேற்ப
படிக்க வேண்டுமென்ற கட்டாயத்தில்
படித்து முடித்தேன்
நல்ல மதிப்பெண்கள் பெற்று.
அப்போது ஒன்றும் அவ்வளவு புரியவில்லை
கல்வியின் கட்டாயம்
வாழ்க்கை என்னும் கடலினை கடக்க
சமுதாயம் என்னும் கப்பலில் பயணிக்க
முற்படும்போதுதான் புரிந்தது
கல்வியின் அவசியம்.
பேதையாக இருந்த என்னை
பல மேடைகள் ஏறச் செய்து
வெற்றிகள் பல பெறச் செய்து
நல்ல குடிமகளாக இச்சமுதாயத்தில்
வாழும் போதுதான் உணர்கிறேன்,
" நான் கற்ற கல்வி எனக்குள்
ஏற்படுத்திய மாற்றத்தை" .
அனைவரும் கல்வி கற்போம்
சமுதாய ஒழுக்கத்தினை காப்போம்.



கவிஞர் ரா. கௌசல்யா, சிவதாபுரம், சேலம்

# மாற்றம் தரும் கல்வி

மாற்றம் தந்திடுமே மாறிய உலகிலே
தேற்றும் விதமாய் தேர்ந்தநல் உறவிலே
கற்றிடும் பாடமும் கருத்தாய் வளர்க்கும்
வெற்றிடம் நிரப்பியே வெளிர்த்த உறவிலே



நலமாய் காக்கும் நகலான நட்பாய்
குலமாய் விளங்கும் குவலய உணர்வாய்
தவமாய் பிறக்குமே தகர்த்திடும் தீயவை
குவித்திடும் வெற்றியைக் குளமாய் நிரப்பியே

மூட நம்பிக்கை முழுதுமே மூலிகை மருந்தாகவே
கடமையில் நிறைக்கும் கருத்தான பண்பாய்
சேவையின் மேகமாய் சேர்ந்திட்ட நிலவாய்
தேவையின் தந்திடும் சுற்றிநல் சுகமாகவே

வருங்காலம் சிறக்க வசந்த பாலமாய்
பெருமையும் கொள்ளுமே பெற்றிட்ட சிறப்பாய்
சமுதாய விழிப்பில் சற்றும் யோசிக்காமல்
குமிழியின் வரமாய் குவிக்குமே பெருமை

முகத்தில் மலருமே முல்லையின் சிரிப்பாய்
இகத்தில் காணாத இன்சொல் புகழே
சுகங்கள் கணிக்கும் சுற்றுப்புற நலனாய்
தாகத்தை தணிக்கும் தாரகை மந்திரமே

கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

# என்னவென்று சொல்வேன்

அவள் என்ன செய்து கொண்டிருப்பாள்
என்று மேகத்தை தூது அனுப்பினேன்
வெகு நேரமாகியும் சென்ற மேகம்
திரும்பவேயில்லை

அவள் அழகில் மயங்கி அங்கேயே தங்கிவிட்டதோ?
அல்லது அவளின் இனிய குரலால் கூறும்
கதைகளைக் கேட்டு கரைந்துவிட்டதோ?

என் மனதின் ஏக்கங்களைச் சுமந்து சென்ற மேகம்,
அவளின் வாசலில் ஒரு துளி மழையாகப் பொழிந்து,
என் காதலை அவளுக்கு உணர்த்திவிட்டதோ?

அவள் கூந்தலில் விழுந்து,
ஒரு முத்துப்போல் மின்னிய அந்த மழைத்துளி,
என் இதயத்தின் துடிப்பை அவளுக்குச் சொல்லியதோ?



அவளின் கன்னத்தில் வழிந்து,
ஒரு கண்ணீர்த்துளிபோல் உருண்டோடி,
என் ஏக்கத்தை வெளிப்படுத்தியதோ?
இல்லை, அவளின் இதழ்களில் பட்டு,
ஒரு முத்தம்போல் கரைந்து,
என் காதலின் ஆழத்தை உணர்த்தியதோ?

அந்த ஒரு துளி மழை, வெறும் நீர்த்துளி அல்ல;
அது என் காதலின் தூதுவன்.
அது அவளின் மனதை நனைத்து,
என் அன்பின் விதையை விதைத்ததோ?
ஒவ்வொரு துளியும்
என் காதலின் மொழியைப் பேசியது,
அவளின் இதயத்தில் ஒரு புதிய
அத்தியாயத்தைத் தொடங்கியது.

கவிஞர் ரா. ரமேஷ், திருப்பூர்

வாழ்க்கையில் நீ அடைய விரும்பும்
இலக்கை நோக்கி சென்று கொண்டே இரு
வெற்றியடைய வேகமாக செயல் படு
வெற்றியடைந்தவுடன்
வெற்றியை  தக்க வைத்த கொள்ள
அதிகமாக செயல்படு
உனக்கான குறிக்கோள் வைத்துக்கொள்
உன் குறிக்கோள்தான் உன்னை
யாரென்று தீர்மானிக்கும்
மனிதா உன் இலக்கை தீர்மானி
உன் வாழ்வில் இலக்கை நோக்கி
ஓடிக் கொண்டே  இரு
உன் இலக்கை அடையும் வரை
மனதில் உறுதியாக இரு
உறுதியான மனம் சாதனை படைக்கும்
முயற்சி தான்  உன்னை உயர்த்தும்
முயற்சி செய்து கொண்டே இரு
சிகரம் பிடித்தால் சிலந்தி வலையும்
உனக்கு குடைப்பிடிக்கும் மறந்துவிடாதே



கவிஞர் மா. நந்தினி, சேலம்

கருக்கொண்ட வான்மேகம் மழையாயப் பொழியும் ;
கடமையென்றே பருவமழை உலகைக் காக்கும் !
இருளகற்றும் ஆதவனைப் போல மழையும்
எழிலார்ந்த பூமிக்கு அன்னை அன்றோ !



வரட்சிதனில் பயிரெல்லாம் அழியா திருக்க
வானவனும் அனுப்பிட்ட மழையோர் வரமே !
உருக்கொண்ட நீர்நிலையில் குடிகள் இருப்பா ;
உயர்ந்திட்ட மலையுடைத்தல் மாண்பாம் செயலா !

அருமைகொடை இயற்கைசட்டம் நாளும் அழித்தால்
அறச்சீற்றம் பேரழிவு வரத்தான் செய்யும் !
மிரட்டிட்டே பேயாட்டம் புயலாய் மாறும் ;
மிகுந்திட்ட நீர்வரத்தால் ஊரும் மூழ்கும் !

விருப்பமுடன் சேமித்தால் தொல்லை உண்டோ ;
வேறுமாநி லம்கெஞ்சும் நிலையும் வேண்டாம் !
மருந்தாகும் விருந்தாகும் மழையைப் போற்றி
வையத்தார் வாழ்ந்திட்டால் உலகே சொர்கம் !

கவிஞர் ஆ சு கந்தன், திருவொற்றியூர் (சென்னை)

சிலநேரங்களில் மழை
அழகான கவிதை
வரிகளின் வரவேற்பாய்

பல நேரங்களில் மழைத்துளிகள்
உயிர் தின்னும்
விலங்கினமாய்

புயலோடு உறவாடும்
மழை மனிதனின் உயிரோடும்
உற்சாகமாய்

பலரின் வீடுகளில் அழையா
விருந்தாளியாக நுழைந்து
அவர்களின்

மகிழ்ச்சியான நிமிடங்களை
மரணத்தின் பயங்களாய்
மாற்றும் மழையின்

கோர முகத்தில் ஏழ்மையின்
வாழ்க்கை சோகத்தின்
சோதனைகளாய்



மழைத்துளியின் அகங்காரத்தில்
மனிதர்கள் உடமைகள்
தொலைத்து அநாதையாக

இப்பொழுது எல்லாம்
மழை ரசிக்க மறந்த
பயங்களாய்

கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

துவண்ட உள்ளங்களில் எல்லாம்
ஓடிக்கொண்டிருப்பது
ஒரேயொரு கேள்விதான்,
நீ என்னை நேசித்திருந்தால்
இப்படி செய்திருப்பாயா என்பது!



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

உறவு இல்லா பிரிவுக்கு
உணர்வுகள் ஏதடி
பிரிவுகளே பிரியமாய்
உன் மனம் ஏங்குவதடி

ஏக்கத்தை போக்கிடவே
ஏற்றேனே உன் சபதம்
மண்ணோடு மண்ணாகி
மரத்துக்கு உரமாகி

மக்களோடு உணவாகி
உயிரினில் கலந்திடுவேன்
பிரிவென்பது எனக்கேது
பிரியத்தின் பிரியமானவளே



கவிஞர் ஏ. தேவராஜ், சென்னை

ஆலயம் தொழுவது சாலமும் நன்று
ஆண்டவன் செயலில் இதுவும் ஒன்று
ஊழ்வினை யாவும் கலைந்திடச் செய்ய
ஊருக்குள் ஆலயம் அமைப்பது நன்று

வானமும் பூமியும் எதிரெதிர் திசையில்
மழையின் வருகை மேகத்தின் இசையில்
நாடுகளில் உள்ள ஆறுகளில் வெள்ளம்
செழித்திட வேண்டும் அனைவரின் இல்லம்

காடுகள் செழித்தால் நாடே சிறக்கும்
மாடுகள் வளர்த்தால் விவசாயமும் சிறக்கும்
ஏடுகள் கற்றவன் கல்வியாளன் ஆனான்- பல
நாடுகள் சென்றவன் பெரும் செல்வந்தனான்



கவிஞர் பகலவன்

# போதை ஒழி விழிப்புணர்வு

மாதத்தில் ஜூன் இருப்பத்தாறம் நாளாம்
உலகெங்கும் ஒழிக்குமாம் போதை தினமாம்
மனித இனத்திற்கே எதிரி இதுவே
பகுத்தறிவு படைத்த மனிதனையே மாற்றிடுமே

பாவங்கள் அனைத்தும் இதுக்கே உரிமையே
வாய்க்குள்ளே புகுந்து வாழ்க்கையை சீரழித்திடுமே
ஆசைகளை தூண்டிட மனது மழை பாயுமே
மனம் போதும் இதனால் தான்

மானம் போவதும் இதனால் தான்
வீட்டிலும் சமூகத்திலும் இதனால் நிம்மதி இல்லையே,
வயது வேறுபாடு அறியாத போதையே
தள்ளாடி மன்றாடியும் ஆசையை செய்யுமே

போதையே பிஞ்சுகளை நாசமாக்கி விடுமே
குடி என்ற போதை உயிருடன் உண்ணும்
காசு கொடுத்து வாங்கி உயிரையும் அழிக்கும்



படித்தவன் பாதியிலே  குடும்பம் வீதியிலே
நண்பர்களைப்  பகைவனாக்கிடும்
பகைவனை நண்பனாக்கிடுமே

வாழ்க்கை ஒரு பரிசு எமக்கு
நாளும் நம் கனவை பறித்திடும் போதை
போதை இன்றிய பாதையை
வகுக்க விழிக்க வேண்டும்

சுவாசிக்க தேவைகள் காற்று
நல் உறவு கொள்ள தேவை நல்ல இதயம்
ஒழிப்போம் போதையை விழிப்பை ஏற்படுத்த
நல்லுலகம் நம் கையில் விழிப்புணர்வுடன்
செயற் படுவோம்.

கவிஞர் ஏ.எம்.முர்ஷிதா பேகம் அக்குரணை (இலங்கை)

மாதங்களுள் மார்கழி தானேதான் என்பதனை
மாதவன் கீதையில் சொல்லி வைத்தாலும்
கன்னனுக்குப்பின் கொடையுமில்லை; கார்த்திகைக்குப்பின் மழையுமில்லையென
காலங்காலமா யொருசொலவடை தமிழ்மண்ணில் வழங்கிவருதலால்
கருதுவேன்யானும் கார்த்திகையே மாண்புடை மாதமென்றே!

கார்த்திகையென்றால் மழையுடன் கன்னனுடனெந்தன் நினைவில்
கந்தன் கார்த்திகேயன் கடம்பன்குகன் முருகன்வருவானே!
கார்த்திகைமாதம் வந்திடும்கார்த்திகைத் தன்னையிங்கு பெரியகார்த்திகையென
காலங்காலமாய்க் கொண்டாடிமகிழும் கூட்டத்திலும் கந்தசஷ்டிபாடுவோர்
கூட்டமதிலும் அடியேனும் இன்றுவரை ஒருவனே!



மேல்நிலைப்பள்ளி மாணவனாயருப் புக்கோட்டையமு தலிங்கேசுவரர்
ஆலயம்சென்ற வேளையிலங் கண்ணாமலையார் மகாதீபவிழா
அறிவிப்புப் பதாகைக்கண்டு அவ்வாலயமேன் கார்த்திகைத்திங்களில்
அகிலம் கொண்டாடும் விழாவொன்றை எடுக்கிறதென்று
அறிந்திடமுயன்று அயனுமரியும் அரனைக்காண முயன்றதன்விளைவென
அறிந்தளவற்றவா னந்தம்கொண்டேன் என்னீசனே முதன்மையென!

விருதுநகர்புகழ் கேவிஎஸ் மெட்ரிக்பள்ளித் தமிழாசானாய்
வளர்ந்தவேளையப் பள்ளிவிடுதி காப்பாளர்திரு இராமையாவென்போர்
அடியேனையவ் விடுதியெடுத்த கார்த்திகைத்தீப விழாவின்போது
அன்னைத்தமிழில் ஆன்மீகச்சொற் பொழிவாற்ற வாய்ப்பளித்ததை
அடியேனின்றும் எண்ணுகையில் அதுவளவற்றவா னந்தம்தருதே!

திருமணமாகும் முன்னரடியேன் வீட்டில்கார்த்திகைத் தீபமென்பது
தியாகியாம்மெழுகு வர்த்தியுடனும் மண்விளக்குடனுமே கொண்டாடினோம்;
திருவிளக்கேற்ற எந்தனில்லம்புகுந் தயென்னவள் வருகைக்குப்பின்
தீபவிழாவில் மெழுகுவர்த்தி முற்றிலுமில்லாப் போனதுவானந்தமே!

திருமுருகாற்றுப் படைப்பாடிட காரணமாயிருந்ந முருகனின்
திருப்பரங்குன்ற மலைமீதிலுள்ள பழங்காலத் தீபத்தூணில்
தீபமேற்றிட நீதிமன்றம் நியாயமான தீர்ப்பளித்தும்
தீபமங்கு ஏற்றவியலா போனதுயென்னவோ பெரும்வருதத்தமே;
தடைகள்முழுவதும் அகன்றுவடுத்த ஆண்டுதீபமங்கே மலரட்டுமே!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

இதோ அதோ என ஆட்டம் காட்டி
குலை நடுங்க வைத்த கொடூரத்தின் வடிவே.

மழை என்றும் வெள்ளம் என்றும்
வீட்டுக்குள்ளே மக்களை முடக்கி போட்ட அசுரனே.

அடை மழை காலமாய் பெருமழையாய்
பொழிந்தும் கூட கோடையைப் போல
மழையும் கூட இயல்பான ஒன்றாய்
ஏற்று வாழ்ந்த முன்னோர்கள்.

ஆனாலும் எங்களுக்கு மழை வெள்ளம் புயல் என்றால்
கலவர பீதியில் காலம் நகருது.

ஆறு குளம் ஏரி என தூர்வார மறந்துட்டோம்
காடு மலை மணல் என இயற்கையை சீண்டிட்டோம்.

மரம் வளர்த்து மழை பெறும் காலமெல்லாம் மறந்திட்டோம்
இயற்கையை போற்றியே இயற்கையோடுஒன்றி
வாழ்ந்திட்ட *மூத்தோரின் வாழ்வியலை* மறந்திட்டோம்.

வருமுன் காப்போம் என்ற சிந்தனையில் ஒன்றாகி
பூமிக்கு கேடான செயல்களை தவிர்த்திடுவோம்.

பூமி நமது வீடென ஒவ்வொரு மனிதருமே
இயற்கையைப் போற்றி காத்தே
இனிய வாழ்வு பெற்றிடுவோம்.

கோடை காலம் போலவே மழைக்காலமும்
இயல்பான ஒன்றாய் ஏற்று
இனிய வாழ்வு வாழ்ந்திடுவோம்.



கவிஞர் ஜேப்பி @ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# மழையின் ரகசியம்

ஆழியுட்புக்கு முகந்து கொடு ஆர்த்தேறி
ஊழிமுதல்வன் உருவம்போல் மெய் கறுத்து
பாழியந் தோளுடை ப் பற்பநாபன் கையில்
ஆழிபோல் மின்னி வலபுரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய் எனவேண்டும்
ஆண்டாளின் பாசுரம் மழையின் ரகசியத்தை
அற்புதமாய் உரைக்கிறதே! மார்கழியில் துவங்கும்
கர்ப்போட்டம்! சூரியன் தனுர்ராசியினைக் கடந்திட
ஈரேழு நாட்களாகும்! இந்நாளில் மேகங்கள்
தெற்குதிசை நோக்கி நகர்வதைக் காணலாமே!
முறையாக மழைமேகம் இந்நாளில் சூல்கொண்டால்
ஒன்பது மாதங்கள் கடந்தபின் ஐப்பசி, கார்த்திகையில்
நன்றாக மழைபொழியும்! நாடுவளம் கண்டிடுமே!
கர்ப்போட்ட நாட்களில் கனமழை பெய்தால்
கருக்கலைந்த மேகம் என்றாகி ,அடுத்தாண்டில்
பருவமழை பொய்த்து மழையளவு குறைந்திடுமே!
கடல்நீர் ஆவியாகி மேகமாகத் திரண்டு
இடி, மின்னலொடு மழைபெய்ய, ஆறுகள்
பெருக்கெடுத்துப் பாய்ந்தோடி கலந்திடும் கடலினிலே!
நீரியல் சுழற்சியினை நன்கறிந்த பழந்தமிழர்
உரைத்தனரே சங்க இலக்கியப் பாடல்களில்!
வெள்ளி கோள்நகரும் திசை வடக்கெனில்
வளம்பெருக மழையுண்டு! அஃதன்றி தெற்கெனில்
அளவிற் குறைந்த மழைப்பொழிவு நிகழ்ந்திடுமே!
மழையின் ரகசியத்தை நன்கறிந்த முன்னோர்கள்
காலத்திற் கேற்றபடி பயிர்களைத் தேர்ந்தெடுப்பர்!
பலபெயர்கள் மழைக்குண்டு! பற்பல வகைகளுண்டு!
நீர்நிலைகளைத் தூர்வாரி, மழைநீரைச் சேமித்தால்
நீர்ப்பஞ்சம் அண்டாது! மழைசொல்லும் இரகசியமாம்!



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

தீபங்கள் நம் வாழ்வியலின் வாழ்வை
ஒளிரச் செய்யும் அற்புத விழா
சைவ சமயத்தின் ஒற்றுமையே
அற்புதநிகழ்வே இத்தீபத் திருவிழா !
காலம் காலமாய் களிப்புடனே
கொண்டாடப்படும் பெருவிழா !
உலகெங்கும் வாழும் தமிழினத்தின்
ஒற்றுமை திருவிழா!
ஒவ்வொரு மனையிலும்,
இந்த ஒளி கீற்று, துன்பங்களை நீக்கி
இன்பத்தை அள்ளித் தருமே!
ஆடலரசன் எம்பெருமான்உமையொரு
பாகனாக அம்பாளோடு காட்சி தந்து
நம்மை மெய் சிலிர்க்க வைக்கிறாரே!
திருவாரூரில் பிறந்தால் முக்தி,
காசியில் இறந்தால் முக்தி.
ஆனால் திருவண்ணாமலையை நினைத்தாலே முக்தி.
அடியும் முடியும் காணாது,
பிரம்ம தேவனும், மகாவிஷ்ணுவும்
ஏமாற்றம் அடைந்தனரே!
தீபம் ஏற்றும்போது பக்தர்களின்
சிவசிவ என்கிற கோஷமும்,
அண்ணாமலையானுக்கு அரோகரா கோஷமும்,
விண்ணையே பிளக்கச் செய்யுமே!
நம் இல்லத்திலும், உள்ளத்திலும்
மகிழ்ச்சி அடைய வைக்கிறதே !
எல்லா சமயத்தினரும் கொண்டாடும்
இந்த விழா மிகச் சிறப்பானதே !




கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

ஒற்றைத் தென்னைமரங்கள்
வயலில் வரிசையாய் நிற்க!
கூடிவாழ்ந்தால் கோடி நன்மை
வாழைமரங்கள் சொல்ல!
பசிய நெற்கதிர்கள் காற்றில்
அசைந்து அதை ஆமோதிக்க!
வானில் திரண்ட கருமேகங்கள்
என்னைப்போல் வருமா? எனக்கேட்க!
என்னைப்போல் பளிச்சிட முடியுமா? என்று
வெட்டியது மின்னல்!
இயற்கையை மிஞ்சியது எதுவும் இங்கில்லை என்று
மாமழை!



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை

# தாழ்மையை கை விடு

சாலையெங்கும் பரவும் தென்றல் காற்றில்
திடீரென புயலாய் வந்து மறைந்து விட்டாய்
யார் நீ?

தொலைந்த நாட்களின் அடையாளம் நீதானோ
மணமற்ற பூவென்று உன் தாழ்மையுணர்ச்சியை சாதகமாக்கி

உன்னை எவ்வளவு வேதனை படுத்தினாலும்
மீண்டும் மலர்கிறாயே ; நீயென்ன அமிர்த மலரா?

வெளிப்புறத்தோற்றத்தில் இல்லை உண்மையான வாசனை
மனதில்தான் இருக்கின்றது



குணப்பண்புகளில் இருக்கின்றது என்பதே
உன் போதனை.

அதை செவிமடுப்பவர்கள் குறைவுதான்
நீ நினைத்தால் உன் போதனையே சாதனையாகும்

காகிதத்தில் உன் எண்ணங்களை பதுக்கும் நீ
மனிதர்களின் இதயத்தில் கொஞ்சம் செதுக்கிப் பாரேன்

முதலில் தட்டி விடலாம்; வார்த்தையம்பை எறியலாம்
அனைத்திற்கும் தாழ்மையை கைவிட்டு துணிந்து நில்.

உன் தன்னம்பிக்கையும் தைரியமுமே என்றும்
உன் வெற்றிக்கு வழி காட்டும் திறவுகோல்

கவிஞர் ரஸ்னா ரம்ஸான், அக்குறணை (இலங்கை)

காட்டின்
வழியே
ஒரு பூ
எதார்த்தமாக
பூத்திருக்கிறது

கற்கள்
எதற்கு
குளத்தின்
தியானத்தை
அப்படியே
விட்டு விடுங்கள்


நொடிகளால்
புன்னகைக்கும்
நாட்கள்
உருவானவை அல்ல
உருவாக்கப்பட்டவை



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்

சுவற்றுப் பாசிகள்
எல்லாம் புது மினுமினுப்பில்
விதையில்லாத விதைப்பு
உரமிடாத உயிர்ப்பு

வழிந்தோடும் நீரையும்
தள்ளிவிடும் அழகில்
சுவற்றில் ஓர் அழகோவியம்
பச்சை வண்ணத்தில்



தீட்டிய இயற்கைக்கு
எத்தனை ரசனை என்ற
யோசித்தபோது
தன்னை நேசித்து தனக்கான
தீற்றலை உருவகப்படுத்தும்
உன்னதம்

நடைபாதை பாசிகள்
மிரட்டிப்பார்க்கும்
வைத்துப்பார் காலை உன்னை
சறுக்கிவிட்டு சாதிப்பேன்
பயத்தோடு நகரும் பாதங்கள்
பணிந்தே போகிறது
இப்பிடிக்கு படர்ந்த பாசிப்பூக்கள்

கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டினம்)

உன்னை நீ ரசித்ததால்
உன்னை நான் ரசித்தேன்
உன்னை நான் ரசித்ததால்
என்னை நான் ரசித்தேன்
என்னை நான் ரசித்ததால்
உன்னை நீ ரசித்தாய்




கவிஞர் இரா. சங்கர், ஈரோடு

# பிரியமெனும் பேரிகை

பிரியத்தை கடத்த நினைக்கிறேன்
முடியாதெனத் தெரிந்தும்.
நைந்துபோன துணிபோல்
கிழிந்து கிடந்தது என்னிதயம்!

வசதிப்பட்டவர்களெல்லாம் கிடைக்கும்பொழுதில்
என்மேல் கூர்பாய்ச்சியதில்
நடந்த கோலமிது.

இறுக ஒட்டிக்கொள்ளும் பசைபோன்ற
அன்பிற்காக ஏக்கத்தோடு
இருப்பதைத் தவற வேறொன்றும் தெரியாதெனக்கு.



வெகுதூரத்திலிருந்து புறப்பட்டு
தகிக்கும் கோடைகடந்து
கெட்டி தட்டிப்போன பனிப்பாளத்தின்
உறைபனிச்சூடு தாண்டி
எங்காவது சற்றுநேரம்
இளைப்பாற இடம் கிடைக்குமென்ற
எதிர்பார்ப்பின் தேடலில்
வசந்தம் கடந்த பொழுதின் ஒருநாள்
நிச்சலனமாய் ஏதோ நானும் இருக்கிறேன்
என்பதின் அடையாளமாக வாழும்

என்வாழ்வெனும் பட்டமரத்தின் கிளைதனில் வந்தமர்ந்து
பிரியத்தை கடத்தும் முனைப்பில் எழும்
உன் புன்னகை பேரிகையால்
சுவடின்றி கலைகின்றது
வறுமை தின்ற என்வாழ்வு.

கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்

# பயணத்தின் படியில்!

குளிர்ந்தாலும் வியர்க்கும்
கோடையிலும் குளிரும்
அசாதாரணமும் சாதாரணமாகும்
நானிருந்தால் உன் அரவணைப்பில்!

இலையுதிர் காலமாய்
மனபாரம் உதிர்த்து
இலை உதிர்க்கும்
மரத்தடியில் மனமிங்கே
இலேசாக பறக்கனுமே!

தலைபிடிக்க என்
தலைவலியும் நீதான்
தலைகோதி என்னை
கண்ணயர உந்துவதும் நீதான்!



தந்தையின் அறிவாக
தாயின் அன்பாக
தனித்துவமாய் என்னை
கவனிப்பதும் என்றும் நீதான்!

சிறு சிறு கோபங்கள்
சிறு சிறு சண்டைகள்
சிறு சிறு வாக்குவாதங்கள்
சிறு சிறு தவறான புரிதல்கள்

புரையோடி பெரிதான பிரிவாக
வழி காணாது காக்கனுமே!
உயிரின் உதிரமாய்
உறைபனியாக உறையாது

என்னில் பயணிப்பாயா!
என்றென்றும் என் வாழ்வில்
என்பலமாக!

கவிஞர் செல்வக்குமரன் சுரேஷ்குமார், சீனா

காலை உலா
காலாற நடக்க
கண் மங்க
என் சிரம் சுற்ற;
அல்ல:
நின்ற மண்
தலம்தான் சரிந்ததா?
விளங்கா நிலையில்
நினைவு மயங்க
கரம் ஒன்று; கவனமாய்;
என் கைத்தலம் பற்ற;
பழக்கமான தொடுதல்
அல்ல! அல்ல!



ஆயினும்
உரமாக பற்றும் கரத்தை
உதற இயலாமல்;
விடாமல் நானும் பற்ற;
பற்றின நொடியில்
பற்று முற்றும் அறுபட;
உயரே உயரே பறந்தேன்
மறந்தேன் மண்ணை
துறந்தேன் அத்தனையும்
செல்லும் வழி புது வழியே!

ஆயினும்
அச்சமின்றி சென்றேன்.
அங்கே இருந்தேன்;
அமைதியுடன் இருந்தேன்
கண்மூடி.
மறந்தேன்; என்னை.

கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

### ஆண்டின் இறுதி நாளிலும்

நாளை இறையிடத்து
நிதானமான பிரார்த்தனை

தொலைக்காட்சி
கேளிக்கை நிகழ்ச்சிகள்

தனித்துவமான
விஷயத்துக்கு
கூடுதல் நேரம்

இப்படி
புத்துணர்வு விஷயத்துக்காய்
புத்தி நினைக்கையில்

அது எல்லாம் இருக்கட்டும்

அடுத்த வாரம்
குறுகிய காலக்கெடுவுக்குள்
முக்கியப் பணிகள்
முடிக்க என்ன திட்டம்
வைத்திருக்காய் என
பதற்றம் கொடுத்து
தொணதொணக்கும்
மனத்தின் கேள்விக்கு

இன்றும்
ஆரம்பிச்சட்டான்யா என
புத்தியின்புலம்பலாய்.

***



### கேட்டுக்கொண்டால்

முடிவு சாதமாக
இல்லாநிலையில்
'காரணம் சொல்பவராய்'

காரியம் நினத்தப்படி
முடிகையில்
போக வேண்டிய தூரம் பற்றி
'நினைவுட்டுபவராய்'

சிறிய உதவிக்கும்
உவகையால்
பெரிய உதவிசெய்தவர்களை
அடக்கமாய் இருக்கிறார்கள் என
'அறிவுரை வழங்குபவராய்'

மனசாட்சி

கேட்டுக்கொண்டு
செயல்பட்டால்
வாழ்வு அர்த்தப்படும்.

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

கண்ணன் அலுவலகத்திற்கு வந்தபோது எதிரே பறந்து வந்த புறாவைப்பார்த்து, 'நரேன் சார் இங்கிருந்தால் இந்தப்புறாவை இரசித்துக் கொண்டிருப்பார்' என்று நினைத்துக் கொண்டே உள்ளே வந்தான்

"வாங்க புதுமாப்பிள்ளை. வாழ்த்துக்கள்" என்றார் பிரபு. சிரித்துக்கொண்டே நின்ற கண்ணனைப் பார்த்து, "கண்ணன் இப்படி கோட்டை விட்டு விட்டீர்களே..." வருத்தமாக கை நீட்டினார்.

மன்னிச்சிக்குங்க சார். நானும் அவர்கள் அங்கே இங்கே சுற்றி விட்டு வீடு திரும்பி விடுவார்கள் என்றுதான் நினைத்தேன். ஆனால் இப்படி யானை அது இதுன்னு... சாரி சார். சரி.. இனி என்ன பண்ணணும்ணு சொல்லுங்க சார். விட்டதை பிடிச்சிரலாம்" கொஞ்சம் உச்சுக்கொட்டிக்கொண்டு சொன்னான்.

"சரி. நடந்ததை சொல்லுங்கள். என்ன செய்யலாம்ணு யோசிக்கலாம்" என்றார் பிரபு. கண்ணன் அவர்கள் கிளம்பியதிலிருந்து, பாம்பு வந்ததை,அவன் அடித்து விரட்டி, அருகில் இருந்த செடியில் அவர்கள் அந்த மருந்து செடியிருப்பதாக ஏமாந்து..." என்றவாறு வரிசையாகச் சொன்னான்.

"கண்ணன் நான் அங்கே போய்ப்பார்த்தால் ஏதாவது வாய்ப்பு இருக்குமா?" என்று கேட்டார். பிரபு

"எனக்கு சரியாகச் சொல்லத்தெரியல சார். ஆனா நீங்க போய் அங்கே என்னப் பார்க்கப் போறீங்கண்ணு தெரியல. மற்றபடி உங்க விருப்பம்"

"அங்கே என்னடாண்ணா அந்த மந்திரி கத்துறாரு. நாம என்ன கையிலே வச்சிட்டு கொடுக்காத மாதிரி என்னவெல்லாமோ பெனாத்துறாரு. அவரும் பாவம்.. எல்லாரும் கை நீட்டி பணம் வாங்கியாச்சு...இவனுக எப்படியாவது அந்த கற்பகச் செடியை கொண்டு வந்துருவானுவ. நாம எப்படியும் லவட்டிட்டு போயிடலாமுண்ணு நெனச்சா...."

சார். இனி என்ன பண்ணலாமுண்ணு பாருங்க.." என்றான் கண்ணன்.
" அதுவும் சரி தான். ம்ம்ம்ம்... கண்ணன் ஒண்ணு பண்ணுங்க. நீங்க ஆஸ்பத்திரிக்குப் போய் அந்த நரேனுக்கும், வசந்துக்கும் என்னாச்சுண்ணு பாருங்க. நான் அவனுக கம்ப்யூட்டரிலே என்னத தேடினாவன்னுப் பார்க்கிறேன்."
"சார்... எங்கே அட்மிட்டாயிருக்காங்க தெரியுமா?"

ஆங்... நம்ம ஆத்தங்கரை பக்கத்திலே ஏதோ சிஸ்டர்ஸ் நடத்துற ஆஸ்பத்திரி தான்... ஆங்... புனித அன்னம்மாள் ஆஸ்பத்திரி தான். ஏதோ வசந்த் தான் போன் பண்ணினான். நீங்க ஆஸ்பத்திரிக்குப் போய் அவனுகளுக்கு என்னாச்சுண்ணு பார்த்து எனக்குச்சொல்லுங்க.."

"சரி சார்..." என்றான் கண்ணன். கண்ணன் புனித அன்னம்மாள் மருத்துவமனைக்கு வந்த போது அங்கே ஒரே கூட்டமாக இருந்தது. அவன் எட்டிப்பார்த்தான். யாரோ அடி பட்டு படுக்கையில் தூக்கிக் கொண்டு ஓட பின்னாலே ஒரு பெண் அழுது கொண்டே ஓடினாள்.
அவன் அந்தக்கூட்டத்தை தாண்டி, வரவேற்பறைக்கு வந்து நரேன், வசந்த் என்று அங்கே இருந்த வெண்ணாடை நர்ஸிடம் கேட்டான்.

"ஓ! யானை கிட்டே அடி பட்டவங்களா? முதல் மாடியிலே இருபதாம் அறையில் ஒருத்தரும்... ம்ம்ம்... இன்னொருத்தர் ஐ.சி.யூ விலே இருக்கிறார்." என்றாள் அந்த நர்ஸ்.
"அடி பலமா பட்டிருக்குமோ சிஸ்டர்?" என்று கேட்டான் கண்ணன்.

"ம்.. சரியா தெரியல... நீங்க எதுக்கும் மேலே போய்ப்பாருங்க" என்றாள் டாக்டர் வருவதைப் பார்த்து எழுந்து நின்று உடையை திருத்திக்கொண்டு. கண்ணன் மாடிப்படி ஏறி முதல் மாடிக்கு வந்தான்.

யாரிடம் கேட்கலாம் என்று திரும்பிய போது வசந்த் கையில் கட்டுப்போட்டவாறு அங்கே தென்பட்டான்.

"ஹலோ வசந்த். " என்று கண்ணன் கத்த எல்லோரும் அவனைத்திரும்பப்பார்க்க, வசந்தும் திரும்பி, " ஏய். கண்ணன் இங்கே எங்கே?" என்று கேட்டான்.

"உங்களைத்தான் பார்க்க வந்தேன். நரேன் சார் எப்படி இருக்கிறார்?" என்று கேட்டான்.

"கொஞ்சம் பலமான அடிதான். இன்னும் நினைவு வரவில்லை. எங்களுக்கு கொஞ்சம் காபி வாங்கி வருகிறீர்களா?" என்றான் வசந்த்.

"நான் ஒரு எட்டு நரேன் சாரைப் பாத்துட்டு போய் என்ன வேணும்ணாலும் வாங்கி வருகிறேனே.." என்றான்.

"சரி. சத்தம் போடாதீங்க. என்று அந்த ஐ.சி.யூ விலே படுத்திருந்த நரேனைக்காட்டினான்.

நரேனுக்கு உடம்பு முழுவதும் கட்டுப்போட்டிருந்தது. ஒரு பக்கம் சலைன் ஏறிக்கொண்டிருக்க...இன்னோர் கையில் குளுக்கோஸ் ஏறிக்கொண்டிருந்தது.

தொடரும்...

# பேசிடும் வார்த்தை ஆயுதமே!

## கட்டுரை



இனிமையான வார்த்தைகள் இதயத்தை தொடும் கடுமையான வார்த்தைகள் கண்ணீரை வரவழைக்கும் என்பது போல, எவ்வளவு கோபம், கவலை, ஆத்திரம் எது வந்தாலும் வார்த்தைகளை விட்டு விட வேண்டாம். ஏனென்றால் அடித்தால் கூட வருகின்ற வலியை விட, வார்த்தைகள் தரும் வலியே வலியிலும் பெரிய வலியாகின்றது. சிலர் தங்கள் எண்ணங்களையும் கருத்துக்களையும் வார்த்தைகள் மூலம் வெளிவிடுவார்கள். பதற்றமில்லாத நேரத்தில் வார்த்தைகளை வெளிவிடுங்கள் இல்லாவிடில் உங்களை நீங்களே தாழ்த்திக் கொள்ள நேரிடும். கோபத்தில் வெளியிடும் வார்த்தை மிக மிக வருத்தத்தை தந்து விடுகின்றது. கோபத்தில் பேசிவிடும் வார்த்தையை கேட்டுக் கொண்டிருப்பவரின் மன நிலை முழு ஆயுலையும் கொன்று விடுகிறது. எனவே நிதானம் தேவை.

வார்த்தைகள் புனிதமானவை.வார்த்தைகள் எப்போதும் வேண்டுமானாலும் ஒரு மனிதனின் வாழ்க்கையை மாற்றிவிடும். சில வார்த்தைகள் உண்மையை மறைத்து விடுகின்றது. மௌனத்தை ஏற்படுத்துகிறது.

சிலரின் வரம்பு மீறிய வார்த்தைகள் நமக்கு வைராக்கியத்தை அகங்காரத்தையும் தந்து விடுகிறது அப்போது நாம் மன அழுத்தத்துக்கு சென்று விடுகின்றோம் அல்லவா? பேசுபவன் உயர்ந்தவனாவான். கேட்பவன் தாழ்ந்தவனாகவும் இருந்து விடக் கூடும். இறுதி கட்டத்தில் வெளியாகும் தீய வார்த்தைகளால் நாம் தான் ஆரோக்கியத்தை இழந்து விடுகின்றோம்.

கவிஞர் ஏ. எம். முர்ஷிதா பேகம், அக்குறணை (இலங்கை)

கட்டுரை

அவர்கள் யார் என்பதையும் எமக்கு அடையாளப்படுத்தி விடுகின்றது, சில வார்த்தைகள் உண்மைக்கு சக்தி அதிகம். ஆனாலும் சில உண்மைகளையே பொய்யாக்கி விடுகின்றது சிலர் அது வார்த்தைகள். பொய்யான வார்த்தைகளைக் கொண்டு ஒருவருக்கு நம்பிக்கை துரோகத்தையும் ஏமாற்றத்தையும் கொடுத்து விடகின்றது. ஒரு சிலர் அன்பான வார்த்தைகளை கூறி ஏமாற்றி விடுவார்கள். இன்னும் சிலர் தங்களின் தேவைகளுக்காக ஆசை வார்த்தைகளை கூறி தேவை முடிந்த பிறகு அவர்களை ஒதுக்கி விடுவார்கள். இன்னும் கூறப் போனால் தங்களின் முன்னேற்றத்திற்காக வார்த்தைகளினால் நம்பிக்கை வரவழைத்து துரோகத்தை தந்து விட்டு செல்வார்கள்.

நாம் விதைக்கின்ற வார்த்தையே நாளை மாறி நமக்கே எதிரியாக மாறிவிடும். எனவே எப்போதும் நல்ல வார்த்தையை விதைப்போம்.அப்போதே நல்ல விளைதளை பெற முடியும். மற்றவர்களது மனநிலையை புரிந்து கொள்ளாமல் நாம் அதிகமான வார்த்தைகளை கொட்டி விட்டால் அது அவர்களை குற்றங்களையும் பாவங்களையும் செய்ய தூண்டி விட முடியும். எனவே வார்த்தைகளில் கவனமாக இருக்க வேண்டும். ஒரு வார்த்தையிலே எந்த உறவும் இலகுவில் முறிந்து விடும். ஆனால் எத்தனை முறை மன்னிப்பு கேட்டாலும் மீண்டும் கடந்து வந்த உறவுகளை மீட்டெடுக்க முடியாது.

உறவுகளை சேர்த்து வைக்கவும் உறவுகளை பிரித்து வைக்கவும் கூடிய ஆயுதமே இந்த வார்த்தைகளே.. வார்த்தையில் புனிதத்தை பேணுங்கள். ஏதோ சிந்தையில் தவறாக யார் மனதையும் காயப்படுத்தி விடாதீர்கள். வார்த்தைக்கு உயிர் உள்ளது. என்பதையும் மறந்து விட வேண்டாம். எதையும் இலகுவில் மறந்து விடலாம். மன்னித்து விடலாம். ஆனால் கோபத்தில் நிதானம் இழந்து வெளியிடப்படும் வார்த்தைகளை மன்னித்தாலும் ஒரு போதும் மறந்துவிட முடியாது. அது மனதில் ஆழமாக பதியப்பட்டு விடும்.

கவிஞர் ஏ. எம். முர்ஷிதா பேகம், அக்குறணை (இலங்கை)

கட்டுரை

சிலர் தங்களை நியாயப்படுத்துவதற்காகவும் அவர்களது தவறுகளை மறைப்பதற்காகவும் அதனை சரி செய்ய பல வார்த்தைகள் பிரயோகத்தை பயன்படுத்தி பேசி விடுகின்றனர்.அந்த வார்த்தையானது வெறும் வாயிலிருந்து வரும் வார்த்தைகள் அல்ல. நெடுநாளாக எண்ணங்களில் இருப்பதே பகிர்ந்து கொட்டி தீர்த்து விடுகின்றனர். தவறு செய்யாதவன் கடைசியில் நிமிடத்தில் தவறு செய்தவனை விடவும் குற்றவாளியாகி விடுகின்றான். அவனுக்கு அது சாகும் வரை மறக்க முடியாத நினைவை தந்து விடுகிறது.

எனவே தன்மானத்துடன் வாழ வேண்டுமென்றால் எப்போதும் வார்த்தைகளை பார்த்து பேசி விட வேண்டும். ஒரு வார்த்தையை வெளிப்படையாக கூறுவதற்கு முன் அதைப்பற்றி கொஞ்சம் சிந்தித்து வார்த்தைகளை வெளியிடவும் கூடிய வார்த்தைகளை மீண்டும் பெற்றுக்கொள்ள முடியாது. அதை மீண்டும் சரி செய்யவும் முடியாது. விட்ட வார்த்தை நல்லதோ கெட்டதோ அவை அனைத்தும் அவரவர் பார்வையிலேயே உள்ளது.வார்த்தை விஷத்தை விட கொடியது.

சந்தோஷத்தில் வரும் வார்த்தைகள் ஒருவருக்கு நாம் கொடுக்கும் நம்பிக்கையையும் அவனில் துணிச்சலையும் ஏற்படுத்தி அவனை சாதிக்கவும் செய்து விடுகின்றது. அடுத்த கட்டத்துக்கு உயர்த்தி விடுகின்றது. சக மனிதனது வாழ்வில் வெற்றிக்கும் இன்னொரு நபரின் வார்த்தைகளே பெரிதும் உதவி புரிகின்றது. வார்த்தைகள் எப்போதும் ஒரு மனிதனுக்கு ஆறுதலை தருகின்றது. ஒருவனை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளவும் வார்த்தைகளே துணை புரிகின்றது.வாழ்வில் நாம் எப்போதும் நிதானம் இழந்து வெளியிடும் வார்த்தைகள் எமக்கான தோல்வியை ஏற்படுத்திவிடும்.நம் வார்த்தையை காலப்போக்கில் நமக்கான எஜமானாக மாறிவிடும். பெற்றோர்களின் மனதையும்,ஆசிரியர்களின் எண்ணங்களையும் மதிப்பளித்து, கூடியிருக்கும் உறவுகளையும் இன்னும் நட்புறவு கொள்ளும்


கவிஞர் ஏ. எம். முர்ஷிதா பேகம், அக்குறணை (இலங்கை)

கட்டுரை

தோழமைகளையும் உங்கள் நல்ல வார்த்தைகளை கொண்டு கவரும்படி நடந்துகொள்ள முயற்சிக்க வேண்டும்.

எனவே ஒரு உறவை ஏற்படுத்த நிலை பெறச் செய்யவும் மிக முக்கியமானது வார்த்தைகளே. இவற்றை நாம் எந்த இடத்தில் எப்படி பயன்படுத்துவது என்பதை சரியான புரிதலுடன் செயல்படுத்தி வாழ முயற்சிப்போம். வார்த்தையில் அமைதி, அடக்கம், நிதானம், தெளிவு, நம்பிக்கை இவை அனைத்தையும் மனதில் கொண்டு நாம் பக்குவமாய் வார்த்தைகளை வெளியிட பழகிக்குவோம்.

எமது வாழ்க்கைக்கு என்றுமே வெற்றியை ஈட்டுத் தந்து புகழ் மாலை சூடிடும் நாம் அறிவுடன் பயன்படுத்தும் வார்த்தைகள் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.



கவிஞர் ஏ. எம். முர்ஷிதா பேகம், அக்குறணை (இலங்கை)

ஒரு கிராமமே முழு உலவாழ் அனைத்து மக்கள் மனதிலும் இடம்பிடித்து பிரார்த்தனைகளை பெற்றுக்கொள்வார்கள் என்றால் அவர்கள் புனிதமானவர்களாக தானே இருக்க வேண்டும். இவர்களோடு நானும் இருந்திருக்கலாம் என்று இப்போதெல்லாம் என் மனம் சொல்கிறது. மரணமென்பது சரியாகவந்தால் தான் நாம் மறுமையில் சுவர்க்கத்தை அடையமுடியும். கேள்விகணக்குள் தாண்டி அருமையானதை அடைய முடியும். நினைக்கும் போதெல்லாம் யாரேனும் அக்கிராமத்தினருக்காக வருந்தும் போதெல்லாம் நன்மையால் அக்கிராமத்தினர் உயரப்படலாம் அல்லவா!

உண்மைக்கும் இவர்களைப்போன்று என் மரணமும் அனைவரிடத்திலும் போய் சேர்ந்து பிரார்த்தனையால் நிறைவடைந்துக்கொண்டே இருக்கும் படியாக வேண்டும். வாழ்க்கை இனிமையாக களிந்தால் போதாது மரணம் கடந்து மனதில் மாறாமல் வாழும் இடத்தை பெறவேண்டும்.

இவர்களைப்போன்று பல்லாயிரம் பேர் பாதிப்புக்குள்ளாகினாலும். மனதை கொள்ளைக்கொண்டவர்கள் தான் சாய்ந்துமருது வெள்ளத்தில் காரொன்று நீரில் மூழ்கி தாத்தா பாட்டியுடன் மரணித்த சின்னசிறு மழலையும். ஊரே திரண்ட போதும் மூழ்கும் காட்சி நெஞ்சை நெறித்தது யாரேனும் பாய்ந்து நீந்திருக்கலாமே ஏதேனும் அவசரமாக செய்திருக்கலாமே என்றாலும் ஒன்றுமாகாது அல்லாஹ்வின் விதியை நாம் மற்றுவதா? அவர்களும் பல தெரியதாவர்களால் துஆக்கலை பெறுமளவு அல்லாஹ் ஏற்படுத்தி உள்ளான் என்றால்? அவர்கள் மூவறும் அல்லாஹ்வின் நேசத்துக்குறியவர்ளில் உள்ளவர்களாக தான் இருக்க வேண்டும்..

(உயிர்) தொண்டைக்குழியை அடையும் வேளை, அப்போது நீங்கள் பார்த்தூக்கொண்டிருக்கிறீர்களே! (அதை) உங்களால் தடுக்க முடியுமா? (திருக்குர்ஆன்: 56;83,84)

கவிஞர் சுஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி (இலங்கை)

இவ்வசனம் எவ்வளவு பொறுத்தமாகி விட்டது. யாராலேனும் அவர்களை காப்பாற்ற முடிந்ததா? இல்லையே ஆனால் எத்தனை பேரால் துஆக்கல் நிறைந்திருக்கும். அல்ஹம்துலில்லாஹ் இவ்வாறல்லவா துஆக்களை சேகரித்து கொள்ள வேண்டும்.

என் மரணமும் நிச்சயிக்க பட்டது தான் ஆனால் எப்படி எப்போது என்றதும் அவன் அறிந்தது தான் ஆனால் ஹலால் நிறைவோடு பல துஆக்களோடு வந்தால் போதும். பல்லாயிர கண்களும் என் மரணத்தை பார்த்தால் போதும். டித்வா புயல் தாக்கம் என் ஊரையும் வாட்டினாலும் அது குறைவானதாக உணர்கிறேன். இன்னும் அதிகமாக சோதித்திருக்கலாம் ஏனென்றால் அடுத்தோரின் வலிகளை நான் கண்டால் மட்டும் கதறுபவளாக இன்றி, நினைத்து நினைத்து வருந்தி துஆக்கல் நிறைக்க எனக்கொரு அத்தாட்சியாக சோதனை வேண்டும்.

சிரிப்பதை குறைத்து அழுவதை அதிகமாக்க யாரும் விரும்புவதில்லை தான். ஆனால் ஆணவம், அகங்காரம் அட்டூழியம் என கெடுதியான குணங்களின்றி நான் வாழவேண்டும் என்றால் போராட்டாங்களுடன் போராடி பக்குவம் அடைதல் வேண்டுமல்லவா! என்னவோ பாதித்தோர் படுக்கைக்காக காவனித்து கஷ்டபடுவதை நினைக்கிறேன்.பசித்த போது ருசிக்க வழியற்று தத்தளிப்போரை நினைக்கிறேன்.வீடை இழந்து அகதியாய் அடையாளமானவர்களை நினைக்கிறேன்.சோர்ந்து குமுறி அழத்தான் முடிகிறது. என்னவோ சொல்கிறார்கள் புயல் முடியவில்லையாம். என்று..

இன்னும் என்ன இருக்கிறது தாங்கும் மனதை கொடுத்து விட்டு தாக்கத்தை நிகழ்த்து இறைவா! எவ்வளவு தேற்றினாலும் தேங்கும் கண்ணீரை மறைக்க முடியவில்லை.. கவரஜ் இன்றிய சில நாட்கள் மனம் கொண்ட வேதனை உறவுகளின் நிலை அறிய இப்போதும் கனவாகவே இருக்கிறது.

காலம் மாறினாலும் மறைந்து போன கிராமத்தை மறக்க முடியாது. மூச்சுக்காக போராடி சுவாசிக்க வழியின்றி அரக்கப்பரக்க உயிர் போயிருந்தாலும் மனதுகளுக்குள் மயங்காத நினைவுகளில் கலந்து என்றும் சுவாசிப்போம்...

"பிரார்த்தனைகள் பலதாய் செய்து நாமும் நினைவை மீட்டிடுவோம்.. அவன் நாட்டம் என்றும் எதுவும் திசைமாறாதெது என நம்மை நாமே தேற்றிடுவோம்".

கவிஞர் சுஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி (இலங்கை)

நூல் அனுபவம்

கவிதைத் தொகுப்பு ; இரஜகை நிலவன் ; வெளியீடு - மராத்திய மாநில தமிழ் எழுத்தாளர் மன்றம் மும்பை ; முதல் பதிப்பு நவம்பர் 2002 ; பக்கம் 64 ; விலை ரூபாய் 15

கவிஞர்களது எண்ணங்கள் எப்போதும் சமூகத்தின் நகர்வுகள் மீதான தாக்கத்தை அவதானித்துக்கொண்டே இருக்கும். வாழ்க்கையின் பரபரப்பையும் அதன் வழியே மக்களின் அவசரத்தையும் சமூக அவலங்களையும் அவை மக்களிடையே ஏற்படுத்தும் தாக்கத்தையும் மனிதர்களது சிறுமைகளையும் சீர்கேடுகளையும் அரசியல்வாதிகளின் அக்கிரமப் போக்குகளையும் மக்களை ஏமாற்றும் வஞ்சகத்தையும் சூடாகவும் எள்ளல தொனியோடும் கண்டனக் குரலிலும் சுட்டிக்காட்டுவது தற்கால கவிதைகளுக்கு உயிரும் உணர்வும் ஊட்டுகிறது. தான் வாழும் சூழலில் தன்னை பாதிக்கும் வாழ்க்கை நிலைமைகளையும் சூழ்நிலைகளையும் மனித இயல்புகளையும் வேதனையோடும் ஏக்கத்தோடும் பதிவு செய்யும் இந்தக் கவிதைகள் வாழ்வில் மனிதன் கற்றுக் கொள்வது என்ன? என்பதையும் மனிதன் மூலம் மற்ற மனிதன் எதையெல்லாம் அறிந்து கொள்ள வேண்டும்? என்பதையும் எடுத்துக்காட்டுகிறது.




**பம்பாய்

எங்கும் எதிலும்
நிதானம் இல்லாமல் தேவையில்லாமலும்
தீப்பிடித்த வீட்டிற்குள்
வாழும் மாந்தர் தப்பித்து ஓடுவதற்கான ஆயத்தங்களோடு
எங்கும் எப்போதும்
எல்லாத் திசைகளிலும்
அவசரம் நிறைந்த நகரமிது.

நான் வாழும் நகரம் எப்படி எல்லாம் அவசரத் தன்மையோடு மனிதர்களை கண்டு கொள்ளாமல் ஓடிக்கொண்டே இருக்கிறது என்பதை இந்த கவிதை குறிப்பிடுகிறது

நூல் அனுபவம்

**பிராணவாயு பிச்சை கேட்கிறது

இயற்கையின் சாவகாச மரணம் பச்சை மரங்களின் சாக்காடு கடலை மூடி இன்னும் புதிய புதிய கட்டிடங்கள்

---------------

ஓசோன் தாண்டி சூரியக்கதிர்கள் பிராணவாயுவை
பிச்சை கேட்கிறது.

மனிதர்கள் தங்களது பேராசைக்காக இயற்கையை பாழ்படுத்தி உலகத்தில் அத்தனை வளங்களையும் தனக்கே சொந்தம் என்று கொண்டாடி கொண்ட தன்னலம் பெருகியதால் ஏற்பட்ட விளைவு வெப்ப நிலை உயர்வு பருவநிலை மாறுபாடுகள் என பல்வேறு இடர்பாடுகள் உயிரினங்களைச் சூழ்ந்து கடும் விளைவுகளை ஏற்படுத்துகின்றன. நமக்கு ஒளியும் வெப்பமும் கொடுக்கும் சூரியனின் கதிர்வீச்சுகள் உயிரினங்களை கடுமையாக தாக்கி பாதிப்பை ஏற்படுத்தும் சூழலுக்கு நமது பேராசை விட்டுச் சென்று இருக்கிறது

**நாங்கள்

இதோ நிலவிற்கு
விலாசம் சொல்லும்
21 ஆம் நூற்றாண்டில்
இன்னும் இங்கே கைரேகைகளும் ஜோசியங்களும்
பெரு வியாதிக்கு மருந்து தேடி இதயமாற்று சிகிச்சை செய்யும் இந்த விளிம்பில் இன்னும் மந்திரக் கயிறும் மாந்திரீகங்களும்

ஜெட் விமானத்திற்கு
டிக்கெட் விலை கேட்டு
அலையும் மக்கள் கூட்டத்திலும் நாளைய உலகைப் பற்றி பிரசங்கிக்கும்
கிரகங்களின் நாடி பிடிக்கும் தேச ராசிகளின் முழு பக்க விளம்பரம்
எங்கோ உலகம் போய் செவ்வாயில் கால் வைக்கும் காலத்தில்
நாங்கள் நாள் நட்சத்திரம் பார்த்து காதுகுத்து விழா கொண்டாடுகிறோம்.

கவிஞர் இளையவன் சிவா

## நூல் அனுபவம்

உலகம் அறிவியலின் துணை கொண்டு எத்தனையோ கருவிகளை கண்டுபிடித்து வேகமான ஓட்டத்திற்கு உதவி செய்து கொண்டே இருக்கின்றன ஆனால் அறிவியல் பார்வையும் அறிவியல் போக்கையும் மறந்துவிட்டு இன்னும் மூடநம்பிக்கைகளின் பின்னால் மனித குலம் சென்று வருவதை இக்கவிதை சுட்டிக்காட்டுகிறது

**அழகு

தொழிலாளர் வர்க்கத்தின் வியர்வை முத்திலும்
கூலி வேலை செய்யும் சித்தாளின் வேகமான நடையிலும்
பாதையோர ஓவியனின் கைவிரல் நடனமாடும் வேகத்திலும்
சுமைதூக்கும் வேலையாளின் கூன் விழுந்த முதுகிலும் நாளைய முடிவிற்கு
காத்திருக்கும் முகத்தின் சுருக்க வரிகளிலும் சிரிக்கும் மழலையின்
எச்சில் சிதறலிலும் கூட அழகைக் காண்கிறேன்.

எது அழகு? அழகின் இலக்கணம் என்ன? வெறுமனே புற அழகை பார்த்து மயங்கி விடுவதில்லை அழகின் தன்மை. உழைப்பின் வர்க்கத்தை உறுதி செய்யும் மனநிலையும் காணும் ஒவ்வொரு காட்சியிலும் நம்மை மகிழ்விக்கும் தன்மையிலும் ஒளிந்திருக்கும் அழகை இந்த கவிதை அழகாக படம் பிடிக்கிறது

**எதிர்கொள்வோம்

மீனாக நீந்த பறவையாக பறக்க
பாம்பாக நெளிய புயலாக சீற
தென்றலாக தவழ
பூக்களை நேசிக்க
முட்களின் வலியுணர
தெரிந்து கொள்
வாழ்க்கையை
நேர்கொள்ளலாம்.

கவிஞர் இளையவன் சிவா

## நூல் அனுபவம்

வாழ்க்கை என்பது இன்பங்களால் நிறைந்த பூந்தோட்டம் மட்டுமல்ல துன்பங்கள் நிறைந்த சூழ்ந்த முட்களாலும் வாழ்வை நாம் நகர்த்த வேண்டிய காலம் வரும். ஒவ்வொரு மனிதனுக்கும் அவளது பாதைகளுக்குள் ஏற்படும் தடைகளும் இடர்பாடுகளும் அவள் மனதில் நம்பிக்கைகளே அதிலிருந்து மீள்வதற்கு வழி செய்கின்றன மனிதன் எல்லா விதமான உயிரினங்களின் செயல்பாடுகளையும் உணர்ந்து கொண்டு முன்னேறும் போதே அவனது இலக்கு அடைவதற்கு அவையெல்லாம் உதவி செய்கின்றன.

**நாம் இந்தியர்கள்

வேலியைத் தாண்டி பயிர்களை மேயும் உயிரினங்களை நம்மால் அடித்து விரட்ட முடிந்தது இருப்பினும் சட்டத்தின் வேலியைத் தாண்டி, நம்மை சுரண்டி தங்கள் பையை நிரப்பும் அரசியல்வாதிகளை மலர்ந்த முகத்தோடு எதிர்கொள்ள முடிந்தது ஏனெனில் நாம் ஜனநாயகம் கொண்டாடும் இந்தியர்கள். விடுதலை வாங்கி ஆண்டுகள் 75 தாண்டிவிட்டாலும் இன்னும் நம் நாட்டில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மனிதர்களும் இருந்து கொண்டு தான் இருக்கிறார்கள் ஒவ்வொரு தனி மனிதனின் பொருளாதார முன்னேற்றமும் ஈடேற முடியாமல் தத்தளிக்கும் சூழலே நிலவுகின்றது. அடிப்படை வசதிகள் இல்லாமல் இத்தனை கோடி பேர் இந்த நாட்டில் இன்னும் அலைந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை எண்ணும்போது நம்மை ஆளும் ஆட்சியாளர்களின் செயல்பாடுகள் மீது நமக்கு கோபமும் எரிச்சலும் வருவதை மறைப்பதற்கில்லை.

**நேசம்

மரங்களை மலைகளை நேசிக்கிறீர்கள் மலர்களை மலையில் இருந்து விழும் அருவிகளை ரசிக்கிறீர்கள்.

------------

பூனைக்குட்டியை நாயையும் நேசிக்கிறீர்கள்
அழகுமிகு சோலைகளை மழைச்சாரலையும் ரசிக்கிறீர்கள் மானிட இதயத்தை மானிடத்தை ரசிக்கவும் நேசிக்கவும்
ஏன் மறந்து போனீர்கள்?

கவிஞர் இளையவன் சிவா

# நூல் அனுபவம்

மனிதர்கள் வளர்ப்புப் பிராணிகளின் மீது காட்டும் நேசத்தையும் பாசத்தையும் அன்பையும் கருணையும் தன்னைச் சுற்றி உயிர் வாழும் பிற மனிதர்கள் மீது காட்டினால் எவ்வளவோ முன்னேற்றங்களும் சமூக ஏற்றத்தாழ்வுகள் நீங்கி சமத்துவம் எளிதில் பிறந்த விடும் என்ற பெருங்கனவை இந்த கவிதை வெளிப்படுத்துகிறது.

**தொடுகை

சிறப்பாக குடும்பம் நடக்கும் சிறியதாய் பெரியதாய் பிணக்குகளோடு.
நேற்றைய உரசல்களும் நாளைய கனவுகளும்
அழிந்து போனதால் அடிக்கடி சொல்லி
சலிக்க வைப்பாள் மனையாள். எப்போது பெரியவளாகி
செலவு வைக்கப் போகிறாளோ என மனபயம்
எழுப்பி விட்டுப் போகும் பெண் பிள்ளை.
தன் வாகனத்திற்கும் கல்விச்சாலை பயணத்திற்கும் எப்போது அம்மா வழியாக
தூது விடுவான் நாளைய வாரிசு.
அவசரமாக பணிக்கு ஓடும் போது
அடிவயிற்றில் கத்திக்குத்துகளாய்.

தன் குடும்பத்தை நேசித்து தனக்காக தன்னைத் தொடரும் தன் வாரிசுகளுக்காகவும் தன் மனைவிக்காகவும் ஓடி உழைத்துக் கொண்டிருக்கும் ஒவ்வொரு ஆண்களுக்கும் இந்த கவிதை சாலச் சிறந்த பொருத்தமாக அமைகிறது. குடும்பத்தின் ஆணிவேராக உழைப்பைச் சுமந்து கொண்டு திரியும் ஒவ்வொரு தந்தைக்கும் தினமும் வாழ்வில் ஏற்படும் இடர்பாடுகளையும் தன்னை நம்பி இருக்கும் தன் குடும்பத்தினரை காப்பாற்ற அவர்கள் ஓடும் ஓட்டத்தையும் இந்த கவிதை மிகச் சிறப்பாக எடுத்துரைக்கிறது.

அரசியல் சமூகம் பொருளாதாரம் இல்லற அரசியல் இயற்கை நேசம் சாதியின் தாக்கம் மூட நம்பிக்கைகளின் தாக்கம் என் நம்மைச் சுற்றி தொடர்ந்து இயங்கிக்கொண்டிருக்கும் வாழ்வியல் செயல்பாடுகளை தனக்கே உரிய கவிதை மொழியில் ரௌத்ரம் பழக்க எழுதியிருக்கும் இந்தக் கவிதைகள் நமக்குள் நல்ல சிந்தனை அலைகளை கரையேற்றிவிடுகிறது.

கவிஞர் இளையவன் சிவா

## பிறப்பும் வளர்ப்பும்:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை அருகே உள்ள செங்கப்படுத்தான்காடு என்னும் சிற்றூரில் அருணாச்சலனார் — விசாலாட்சி தம்பதியருக்கு இளைய மகனாக 1930 ஏப்ரல் 13 அன்று பிறந்தார். இவரது தந்தையும் கவிபாடும் திறன்பெற்றவர். உள்ளூர் திண்ணைப் பள்ளியில் இரண்டாம் வகுப்பு வரை மட்டுமே கல்வி பயின்ற கல்யாணசுந்தரம், தனது அண்ணன் கணபதிசுந்தரத்திடமே அடிப்படை கல்வியையும், கவிபுனையும் திறனையும் வளர்த்துக் கொண்டார்.



## பன்முகப் பரிமாணங்கள்

குறுகிய கால வாழ்வுக்குள் இவர் விவசாயி, மாடு மேய்ப்பவர், உப்பளத் தொழிலாளர், நாடக நடிகர், அரசியல்வாதி எனப் பதினேழுக்கும் மேற்பட்ட பல்வேறு தொழில்களில் ஈடுபட்டார். இதனால் பாட்டாளி வர்க்க மக்களின் துயரங்களையும், ஆசைகளையும் நேரடியாக உணர்ந்தார்.

இளம் வயதிலேயே சுயமரியாதை இயக்கத்திலும், பொதுவுடைமைக் கட்சி (கம்யூனிஸ்ட் கட்சி)யிலும் ஈடுபாடு கொண்டு விவசாய இயக்கத்தைக் கட்டி வளர்க்கத் தீவிரமாகப் பங்காற்றினார்.

நடிப்பின் மீது கொண்ட ஆர்வத்தால், பின்னாளில் புகழ்பெற்ற சிவாஜி கணேசன், எம்.என். நம்பியார் போன்றோர் இருந்த 'சக்தி நாடக சபா'வில் நடிகராகவும் இருந்தார்.

திரு அ.வில்சன், இதழாசிரியர்

**குருவும் திரையுலகப் பிரவேசமும்:**

1952ஆம் ஆண்டு புதுச்சேரி சென்று பாவேந்தர் பாரதிதாசனிடம் தமிழ் பயின்று, அவரது 'குயில்' இதழில் உதவியாளராகப் பணியாற்றினார். பாரதிதாசனையே தனது மானசீக குருவாக ஏற்றுக்கொண்டார்.

1954ஆம் ஆண்டு வெளிவந்த 'படித்த பெண்' திரைப்படத்திற்காக இவர் எழுதிய 'காப்பி ஒன்னு எட்டணா' என்ற பாடல்தான் திரையுலகில் இவரது முதல் பாடல்.

**புரட்சிக் கவிஞரின் முத்திரை:**

அதுவரை காதல், பக்தி என்றிருந்த தமிழ்த் திரையிசைப் பாடல்களில் புரட்சி, பகுத்தறிவு, பொதுவுடைமைச் சித்தாந்தம், சமூகச் சீர்திருத்தம், தன்னம்பிக்கை ஆகியவற்றை எளிய மக்கள் மொழியில் ஆணித்தரமாகப் புகுத்தி பாடல்களின் போக்கையே மாற்றிக் காட்டினார். வெறும் ஆறு ஆண்டுகளே நீடித்த கலை வாழ்வில், சுமார் 57 திரைப்படங்களில் 262 பாடல்களை எழுதினார்.

**மக்கள் மனதில் நிலைத்த சில பாடல்கள்:**

"ஆளும் வளரணும் அறிவும் வளரணும் அது தான்டா வளர்ச்சி"
"தூங்காதே தம்பி தூங்காதே சோம்பேறி என்ற சொல் வாங்காதே"
"வறுமை நிலைக்குப் பயந்து விடாதே திறமை இருக்கு மறந்து விடாதே!"
"குறுக்கு வழியில் வாழ்வு தேடிடும் குருட்டு உலகமடா"
"திருடராய் பார்த்தும் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது"

திரையுலகில் இவர் நிலைநாட்டிய பெருமையைக் கண்டு வியந்த முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர்., "என் முதல்வர் நாற்காலியில் நான்காவது கால் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்தான்" என்று

திரு அ.வில்சன், இதழாசிரியர்

புகழாரம் சூட்டினார்.

## இறப்பு :

1957ஆம் ஆண்டு கௌரவம்மாளை மணந்தார். இவர்களுக்குக் குமரவேல் என்னும் மகன் பிறந்தார். தமது வாழ்நாள் முழுவதும் சமுதாயத்தின் விடியலுக்காகப் பாடிய மக்கள் கவிஞர், சயனஸ் தொந்தரவுக்கான சிகிச்சை அளித்ததில் ஏற்பட்ட பிழையின் காரணமாக, தமது 29ஆவது வயதில் 1959 அக்டோபர் 8ஆம் நாள் மரணமடைந்தார்.

இவரது மறைவுக்குப் பிறகு, "பட்டுக்கோட்டை சாய்ந்ததா? இல்லை பாட்டுக்கோட்டையே சாய்ந்ததம்மா!" என்று கவிஞர் கண்ணதாசனும், "கண்களைத் திறக்கிறேன்: கல்யாணம் இல்லை-கலையுலகு இருட்டாயிருக்கிறது" என்று கலைஞர் மு. கருணாநிதியும் உருக்கமாக இரங்கல் தெரிவித்தனர்.

பட்டுக்கோட்டையார் மறைந்தாலும், அவர் விதைத்த முற்போக்குச் சிந்தனைகளும், ஒடுக்கப்பட்ட மக்களுக்காக அவர் குரல் கொடுத்த பாடல்களும் இன்றும் காலத்தால் அழியாத சமூக வேதங்களாகத் திகழ்கின்றன. இவரது பாடல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளன.



நாளை

# நமதே

## உன் கையில்
## பணமில்லையெனினும்
## தன்னம்பிக்கையிருந்தால்
## நீயும் செல்வந்தனே

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு
அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு
சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



## அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com